lஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-2 ஜூலை - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



## கடல்நீர் குடிநீராகுமா?

குருவே துணை

# திருமண வாழ்த்து

**மணமகன்**
முனைவர் **M.சத்தியராஜ்**

**மணமகள்**
**M.பூரணி**



**14.06.2019** அன்று
நடைபெற்ற எங்கள்
**திருமண விழாவிற்கு**
வருகை தந்து வாழ்த்திய
உற்றார் உறவினர்கள்,
நண்பர்கள் மற்றும்
பத்திரிகையாளர்கள்
அனைவருக்கும்

## நன்றி! நன்றி!! நன்றி!!!

**இங்கனம்**

முனைவர் **M.சத்தியராஜ்,** B.Sc., L.L.B., Dip.Journalism
ஸ்ரீ சத்தி & சிவபாரதி மோட்டார்ஸ்
முதன்மை செய்தியாளர் - **மக்கள் விசாரணை**
மாநில துணைத் தலைவர் - **தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்**

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

## தங்கமாவது இருக்கும்! தண்ணீர் இருக்காது!

சென்னை, டெல்லி, பெங்களூரு, ஐதராபாத் உள்ளிட்ட 21 பெரிய நகரங்களில் வரும் 2020 ஆண்டில் 'தண்ணீர் தங்கம்' எனப்படும் நிலத்தடி நீர் பெருமளவில் வற்றிவிடும்; இதனால் 10 கோடி பேர் பாதிக்கப் படுவார்கள் என்ற அதிர்ச்சி தகவலை மத்திய அரசின் நிதி ஆயோக் வெளியிட் டுள்ளது. இதுதவிர வரும் 2030ம் ஆண்டில், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு குடிநீரே கிடைக்காது என்றும் அதன் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது.

நிதி ஆயோக் சொல்லும் 2020க்கு இன்னும் சரியாக 6 மாதங்கள்தான் உள்ளன. அதைத்தொடர்ந்து நிலத்தடி நீர் சென்னையில் பெருமளவில் கீழே இறங்க ஆரம்பித்துவிடும். இப்போது குளிப்பதற்கு ஆவது, உப்பாக இருந்தாலும் நிலத்தடிநீர் பயன்படுகிறது. அடுத்த ஆண்டில் அதுவும் இருக்காது என்ற தகவல், பதைபதைக்க வைக்கிறது.

சென்னையில் மூன்று ஆறுகள், நான்கு நீர் நிலைகள், ஐந்து சதுப்பு நிலங்கள், 6 வனப்பகுதிகள் ஏற்கனவே கடும் வறட்சியில் சிக்கி உள்ளன. இத்தனைக்கும் சென்னையில் போதுமான அளவு மழை கிடைக்கிறது. ஆனால், அதை சரியாக பயன்படுத்தாததால், நீர்நிலைகள் வறண்டு, மக்களை பதம் பார்க்க ஆரம்பித்துள்ளது. சென்னையில் கடல் இருக்கிறது; அதை வைத்து குடிநீர் ஆக்கிவிடலாம் என்று சில மேதாவிகள் பேசுகின்றனர். ஆனால், கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் என்பது பெரும் செலவுக்குரிய ஒன்று. மேலும், சென்னை போன்ற பெருநகர மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு குறைந்தபட்சம் 50க்கும் மேற்பட்ட கடல்நீரை குடிநீராக்கும் மையங்களை அமைக்க வேண்டும். ஆனால், நிஜத்தில் இது முடியுமா?இயற்கை அன்னை ஒவ்வொரு ஆண்டும், நமக்கு போதுமான அளவுக்கு மழை என்ற கொடையை அளிக்கிறது. ஆனால், அதை பாதுகாக்காமல் கடலில் கலக்க விட்டும், கால்வாய்களில் கலக்க விட்டும் அஜாக்கிரதையாக இருப்பதன் பலனைத்தான் இப்போது சென்னை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

அரசின் அஜாக்கிரதை ஒரு பக்கம் இருந்தாலும், மக்களும் தங்கள் பங்குக்கு ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும் சேமிக்க தங்களால் முடிந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலில் மழைநீர் சேகரிப்புக்கான குழிகளை ஒவ்வொரு வீட்டிலும் அமைக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு முறை தண்ணீர் குடிக்கும்போதும், அடுத்த ஆண்டில் அது நமக்கு கிடைக்குமா என்று கவலைப்பட வேண்டிய நிலை உருவாகும். தங்கமாவது இருக்கும்; தண்ணீர் இருக்காது.

**- ஆசிரியர்**

# தண்ணீருக்கு அலையும்

# சென்னை வாசிகள்!

தமிழகம் முழுவதும் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு தண்ணீர் பிரச்னை தலைவிரித்தாட தொடங்கியுள்ளது. குறிப்பாக மாநிலத்தின் தலைநகரான சென்னையில் வரலாறு காணாத அளவுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. குடிப்பதற்கே தண்ணீருக்காக அலையும் நிலை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ளது.

தண்ணீர் பிரச்னைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பலர் வீடுகளை காலி செய்து விட்டு தங்களுடைய சொந்த ஊர்களுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். ஓட்டல்கள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசு மருத்துவமனைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. ஆழ்துளை கிணறுகளில் உள்ள நிலத்தடி நீரும் 300 அடி, 400 அடி என்று சென்று விட்டது. பல இடங்களில் 400 அடி தோண்டினாலும் தண்ணீர் கிடைக்காத நிலை நீடித்து வருகிறது. இதனால், பல ஆயிரம் செலவு செய்தும் தண்ணீர் எடுக்க முடியாத நிலைதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

நிலத்தடி நீர் வறண்டு போனதால் சென்னையில் வசிக்கும் மக்கள் மெட்ரோ நீரையே நம்பி தற்போது காலம் கடத்தும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மெட்ரோ நீரை பெற ஆன்லைன் மூலமாக புக்கிங் செய்ய வேண்டும். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே ஆன்லைனில் புக்கிங் செய்யும் வசதி தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்த நேரத்தில் புக்கிங் செய்தால்தான் மெட்ரோ வாட்டரை பெற முடியும். 6000



லிட்டர் மெட்ரோ நீருக்கு ரூ.475, 9 ஆயிரம் லிட்டர் மெட்ரோ நீருக்கு ரூ.750 கட்டணமாக பெறப்படுகிறது. சாதாரண நாட்கள் ஒருவர் மெட்ரோ வாட்டரை புக்கிங் செய்தால் குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்குள் தண்ணீர் கிடைத்து விடும். தற்போது புக்கிங் செய்தால் குறைந்த பட்சம் 20 நாட்கள் வரை காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.



மேலும், 20 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கிடைப்பதால் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்கள் மற்றும் அவசரத்துக்கு தண்ணீர் கேட்டு விண்ணப்பித்தவர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். ஆனால் அமைச்சர்கள், அதிகாரிகள், வசதி படைத்தவர்கள் தண்ணீருக்கு புக்கிங் செய்தால் உடனுக்குடன் தாராளமாக தண்ணீர் சப்ளை செய்வதாகவும் புகார் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மெட்ரோவில் 900 லாரிகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த லாரிகள் மூலம் தான் நகர் முழுவதும் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகின்றது.

தண்ணீர் தட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு தனியார் லாரிகள் தண்ணீரில் கொள்ளை லாபம் சம்பாதிக்க தொடங்கியுள்ளன. ஒரே இடத்தில் 10க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறுகளை அமைத்து தண்ணீரை எடுக்கின்றனர். மேலும் புறநகர் பகுதியில் இலவச மின்சாரத்தை பயன்படுத்தி விவசாய நிலங்களில் இருந்து தண்ணீர் எடுக்கின்றனர்.

அவ்வாறு எடுக்கப்படும் தண்ணீர் ரூ.900 என்று ஒரு லாரிக்கு விற்கப்படுகிறது. அங்கிருந்து பொதுமக்களுக்கு ஒரு லோடு தண்ணீர் ரூ.4000 முதல் ரூ.5000 வரை விற்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதன் மூலமாக லட்சக்கணக்கில் பணம் கொழிப்பதாக கூறப்படுகிறது. தேவை அதிகமாக இருப்பதால் மக்கள் விலையை பொருட்படுத்தாமல் தண்ணீரை வாங்கி பயன்படுத்தியும் வருகின்றனர். தண்ணீரை அதிக விலைக்கு விற்கக்கூடாது என்று உள்ளது.

அவ்வாறு விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் விதி உள்ளது. ஆனால் அவர்கள் இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் அமைச்சர்கள், அதிகாரிகள், உள்ளூர் அரசியல் பிரமுகர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு பணத்தை கொடுத்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதனால், வசதி படைத்தவர்களுக்கு மட்டும்தான் தண்ணீர் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனால் வசதி குறைந்தவர்கள் மெட்ரோ வாட்டர் லாரி எப்போது வரும் என்று தெரியாமல் இரவு, பகல் பார்க்காமல் கால்கடுக்க தெருக்களில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே, உடனடியாக அதிக விலைக்கு தண்ணீரை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

**– K. ரமேஷ்குமார்**

# சாகாக் கலை
## எனப்படும்
# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

சித்தர்கள் காயகற்பங்களை உண்டு தங்களின் உடலுக்கு நோய்கள் வராமலும், தங்களின் உடலை வலுவூட்டவும் செய்தனர். தனி மூலிகைகளைக் கொண்டே காயகற்பம் செய்தனர். அவ்வாறு சித்தர்கள் எடுத்துக்கொண்ட சித்தர்களின் மூலிகை காயகற்பங்கலாவன,

அகத்தியர் 100 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

கோரக்கர் கஞ்சா மூலிகையை முக்கிய காயகற்பமாக உண்டவர், கஞ்சா மூலிகை உட்பட 90 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

நந்தீசர் 100 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

ரோமரிசி 71 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

குகைகன்னார் 71 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

மச்சமுனி வல்லாரை மூலிகையை முக்கிய காயகற்பமாக உண்டவர், வல்லாரை மூலிகை உட்பட 71 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

ராமதேவர் 71 மூலிகை காயகற்பங்களை உண்டவர், முக்கிய மூலிகையாக கருநீலி கற்பம் உண்டார்.

திருமூலர் 66 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

போகர் கொல்லங்கோவை மூலிகையை முக்கிய காயகற்பமாக உண்டவர், கொல்லங்கோவை மூலிகை உட்பட 44 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

சட்டமுனி 21 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

**வள்ளலார் அருளிய கல்ப மருந்து**



கொங்கணர் பொற்றிலைக்கையான் மூலிகையை முக்கிய காயகற்பமாக உண்டவர், பொற்றிலைக்கையான் மூலிகை உட்பட 16 மூலிகை காயகற்பங்களை உண்டவர்.

காளங்கிநாதர் சிவகரந்தை மூலிகையை கற்பம் செய்து உண்டவர்.

சிவயோகி கரிசாலை மூலிகையை முக்கிய காயகற்பமாக உண்டவர்.

கஞ்சமலை கருநீலி மூலிகையை கற்பம் செய்து உண்டவர்.

பதஞ்சலி செருப்படை மூலிகையை முக்கிய காயகற்பமாக உண்டவர்.

பத்தர் செங்கற்றாழையை கற்பம் செய்து உண்டவர்.

நரை, திரை, மூப்பு, சாக்காடு வெல்ல தமிழ் சித்தர்கள் பல அரிய மூலிகைகளை பயன்படுத்தினர். மக்கள் நலனுக்காக சில மூலிகைகளின் பெயர்களை இங்கே தொகுத்துள்ளோம்.

அமுகண்ணி
தொழுகண்ணி
கணைஎருமை விருட்சம்
தில்லை விருட்சம்
சதுரமரம்
தும்புராமரம்
அரி நெல்லிமரம்
சரள தேவதாருமரம்
சோதி விருட்சம்


கருவாழை
கருஊமத்தை
மலை அரளி
பப்பரப்புளிய மரம்-பஞ்சவேதி
சோம விருட்சம்
எட்டி மரம்
வெள்ளெருக்கு மரம்
சிகப்பு கீழ்க்காய் நெல்லி
குங்கிலிய மரம்
தான்றி மரம்
காயா மரம்
சிகப்பு தூதுவேளை
செங்கரிப்பான்
சர்க்கரை வேம்பு
வன்னி மரம்
தேவதாருமரம்
இந்திர வீர மரம்
வேம்பின் மேற் புல்லுருவி
கல்லத்தி மரம்
குருக்கத்தி மரம்
சேங்கொட்டை மரம்
சீந்தில் கொடிகள்
வேர்ப்பலா மரம்
கருங்கொடு வேலி
கருந்துத்தி
செந்தகரை
செங்கடுக்காய் மரம்
வெள்ளைப் பணல் முருங்கை
பேய்ச்சுரை
குருவரிக்கற்றாழை
மஞ்சள்பூ தைவேளை
செங்கற்றாழை
செந்நாயுருவி
அமிர்தவள்ளி
உரோம விருட்சம்
கருநெல்லி மரம்
நாகப்படக் கற்றாழை
வெண்நாவல்
வனப்பிரமி
முப்பிரண்டை
கரிப்பான்
சோதிப் புற்கள்
சிவந்த இலைக்கள்ளி

செங்கொடிவேலி
சாயா விருட்சம்
சேர்ந்தாடும் பாவை
பஞ்சதரு
சஞ்சீவி மூலி
உரோம வேங்கை மரம்
இருப்பவல் செடி
கணங்க விருட்சம்
பவளத்துத்தி
கருநொச்சி
கருநாரத்தை
நாகதாளி
சிவந்தபுனல் முருங்கை
பால்ப்பட்டை
அகில் மரம்
பாதிரி மரம்
கடுக்காய் மரம்
தேற்றான் மரம்
கரப்புன்னை
கல் தாமரை
முண்டக விருட்சம்
சிறியா நங்கை
ஆயில் மரம்
மயிலை மரம்
பிறாய் மரம்
கெட்டிவஞ்சி மரம்
கொஞ்சி மரம்
தொனியா மரம்
பிர்மதரு
கருக்குவாச்சி மரம்
ஊக்குணா மரம்
கைவலாக்கை மரம்
கணங்க விருட்சம்
பொற் சீந்தில்
வெண் துத்தி
திருகுக்கள்ளி
மிளகரணை
கானற்பலா
வெள்ளை வேம்பு
இரத்தப்பலாசு மரம்
நேத்திரஞ்சிமிட்டி
வல்லாரை
சிவனார் வேம்பு



வெள்ளை நீர்முள்ளி
ஓரிலை தாமரை
பூமி சர்க்கரைகிழங்கு
ஆடு தின்னாப்பாளை
ஆடாதோடை
சீதா செங்கழுநீர்
செவ்வாழை
நெல்லி மரம்
வேலிப்பருத்தி கொடிகள்
துத்திச்செடிகள்
சத்திரப்பூடு
பொற்றலைக்கையான்
பாற்சொரி மரம்
வரை ஆலமரம்
செவ்வள்ளிக்கொடி
பலூனி மரம்
செங்கும்ரி வரை ஆலமரம்
கருங்கரிப்பான்
செந்தும்பை
கருந்தாமரை
குமரிக்கற்றாழை
பொற்பூ தைவேளை
நாகதாளிக்கள்ளி
அதிகாயசித்தி மூலிகைகள்:
பொற்சீந்தில்
விழுதி இலைக்கிழங்கு
பேய்ச் சுரை
சர்க்கரை வேம்பு
கருப்புச்சித்திர மூலம்
வெள்ளைப் பூ தூதுவேளை
பேய்க்கடலை
கருமருது
கருஞ்சிற்ற கத்தி
கரு நெல்லி
நாகதாளி
நாறுகரந்தை
மால்தேவிவிதை

- தொடரும்




# மழைநீர் சேகரிப்பு திட்டம்

## மீண்டும் கட்டாயமாக்கப்படுமா?

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தினால் மட்டுமே கட்டிட அனுமதி வழங்கப்படும் என்ற தமிழக அரசின் உத்தரவு தற்போதுதீவிரமாக அமல்படுத்தப் படாததால், வறட்சி காலத்தில் தண்ணீர் கிடைக்காமல் மக்கள் சிரமப்படுகின்றனர். நிலத்தில் பெய்யும் மழையில் 40 சதவீதம் கடலில் கலப்பதாகவும், 35 சதவீதம் வெயிலில் ஆவியாவதாகவும், 14 சதவீதம் நிலத்தால் உறிஞ்சப்படுவதாகவும், 10 சதவீதம் மண்ணின் ஈரப்பதத்துக்கு உதவுவதாகவும் கணக்கிடப்படுகிறது.

ஆனால், தற்போது கிராமங்கள்முதல் நகரங்கள் வரை வீடுகள், கட்டிடங்கள் அருகருகே கட்டப்படுவதாலும், திறந்த வெளிகளை சிமெண்ட் தளங்கள் அமைத்தும், தார்ச்சாலைகள் அமைத்தும் மூடி விடுவதால், பெய்யும் மழை நீரில் 5 சதவீதம்கூட நிலத்தால் உறிஞ்சப்படுவதில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 2001-ம் ஆண்டில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு, 'நிலத்தடி நீர் மேம்படுத்துதல் மற்றும் நீர் மேலாண்மை' சட்டத்தைக் கொண்டு வந்தது. வீடு, அடுக்குமாடி குடியிருப்புகள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்களில், கட்டிட அனுமதி பெறும்போது மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகளை கட்டாயம் ஏற்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தாத கட்டிடங்களுடைய மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் 2006-ல் ஆட்சிக்கு வந்த திமுகஅரசு இந்த திட்டத்தை கண்டுகொள்ளவில்லை. மீண்டும் 2011-ல்பொறுப்பேற்ற அதிமுக அரசு, இந்த திட்டத்தின் மீது ஆர்வம் காட்டவில்லை. மக்களும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தாமலேயே கட்டிடம் கட்டுகின்றனர். அவ்வாறு மழை நீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்தியவர்களில் பெரும்பாலானோர் பயனடைந்துள்ளதை தற்போது பெருமையாகக் கூறுகின்றனர்.

கடும் குடிநீர் தட்டுப்பாடு தொலை நோக்குடன் ஜெயலலிதா கொண்டு வந்த மழைநீர்சேகரிப்பு திட்டம் கண்டுகொள்ளாமல் விடப்பட்டது. அதனால், தற்போது சென்னை மட்டுமின்றி மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் வாரத்துக்கு ஒரு முறையே குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. ஒரு குடம் குடிநீரை 8 ரூபாய்க்கு வாங்க வேண்டிய நிலை உள்ளது.

நிலத்தடி நீர்மட்டம் பல இடங்களில் 1,000 அடிக்கு கீழே சென்றுவிட்டதால் மதுரை அண்ணா நகர், கே.கே.நகர், டிஆர்ஓ காலனி உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள், டிராக்டர், லாரி தண்ணீரை வாங்கி பயன்படுத்துகின்றனர். அதேநேரம் தனிப்பட்ட ஆர்வத்தில் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தி தண்ணீரை சேமித்தவர்கள், குடிநீர் தட்டுப்பாடின்றி உள்ளனர். மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருந்தால்தான் கட்டிட அனுமதிஎன்ற திட்டத்தை உள்ளாட்சி அமைப்புகள் கட்டாயமாக செயல்படுத்தியிருந்தால் இன்று குடிநீர் பிரச்சினை பெருமளவு குறைந்திருக்கும்.

கண்காணிப்பில் தொய்வு குறித்து மாநகராட்சி நகரமைப்பு அதிகாரி, "மழைநீர் சேகரிப்புத் திட்டம் தொடர்பான அரசு ஆணை நடைமுறையில்தான் உள்ளது. கட்டிட அனுமதி வரைபடத்தில் ஏதாவது ஓரிடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருப்பதாகக் காட்டுகின்றனர். ஆனால், அரசுஇந்த விஷயத்தில் கட்டாயப்படுத்தாததாலும், கண்காணிப்பு மற்றும்ஆய்வு செய்வதில் தொய்வு ஏற்பட்டுள்ளதாலும் பெரும்பாலானோர் முறைப்படி மழைநீர் சேகரிப்பு அமைப்பை கட்டுவதில்லை" என்று கூறினார்.




**- அகிலாண்டேஸ்வரி**

தினக்கூலி அடிப்படையில்

# ஓய்வு பெற்ற ரயில் ஓட்டுனர்களை மீண்டும் பணியமர்த்த ரயில்வே முடிவு

## தினக்கூலி அடிப்படையில்

இந்தியா முழுவதும் ரயில் ஓட்டுனர்கள் பிரிவில் நிறைய காலிப்பணியிடங்கள் உள்ளது. பல மண்டலத்தில் வழக்கமான ரயில்களை கூட இயக்குவதற்கு தடுமாறி வருகின்றன. இதனால் ரயில்வே வாரிய இயக்குனர் நிரஜ் குமார் கடந்த ஜூன் 4 ம் தேதி ஓய்வு பெற்ற உதவி லோகோ பைலட்டுகளை மீண்டும்தினக்கூலி அடிப்படையில்பணியமர்த்த உத்தரவு பிறப்பித்து இருக்கிறார். மருத்துவ தகுதியுடன் கூடிய 60 முதல் 65 வயதிற்கு உட்பட்ட ஓய்வு பெற்ற ஓட்டுனர்கள் மீண்டும் பணியமர்த்தப் பட இருக்கிறார்கள். ஜல்லி கற்கள், ரயில்வே தளவாடங்கள் ஏற்றிச் செல்லும் துறை ரயில்கள் இயக்க, பெரிய ரயில் நிலையங்களில் என்ஜின்கள் அவிழ்த்து மாட்ட, பராமரிப்பு யார்டு களுக்கு பெட்டிகள் கொண்டு சென்று வர இவர்களை பயன்படுத்த முடிவு செய்து இருக்கிறது.

தெற்கு ரயில்வேயில் 835 என்ஜின்கள், 4 ஆயிரத்து 798 ரயில் ஓட்டுனர் பணியிடங்கள் உள்ளது. இதில் 539 காலியிடங்கள். தற்சமயம் 150 பேர் தேர்வு செய்யப்பட்டு ஓட்டுனர் பயிற்சியில் இருக்கிறார்கள். தேர்வு வாரியம் 528 உதவி ஓட்டுனர் பணியிடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்ய இருக்கிறது. இவர்கள் பணியில் சேர ஒரு ஆண்டுக்கு மேல் ஆகும். இதனால் தெற்கு ரயில்வே ஓய்வு பெற்ற ரயில் ஓட்டுனர்களை மீண்டும் பணியமர்த்த இருக்கிறது. இதுகுறித்து தட்சிண ரயில்வே எம்ப்ளாயிஸ் யூனியன் மாநில துணைப் பொதுச்செயலாளர் மனோகரன் கூறுகையில்,பயணிகள் ரயில்கள் இயக்க அனுமதிக்காமல் ரயில் நிலைய சன்டிங் என்ஜின்கள், துறைக்கான ரயில்கள் மட்டும் இயக்க அனுமதித்து இருப்பதில் இருந்தே, இவர்களால் விபத்து ஏற்பட்டால் பெரிய பின் விளைவுகள் இருந்து விடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு நிர்வாகத்திற்கு இருப்பது தெளிவாகிறது. ரயில் நிலையங்களுக்குள் சன்டிங் செய்வதில் நிறைய விபத்துகள் நிகழ்ந்து இருக்கிறது.



விபத்து நிகழ்ந்தால் இவர்களை விசாரணை வளையத்திற்குள் கூட கொண்டு வர முடியாது. விபத்துக்கள் எண்ணிக்கை குறைக்கவே ரூ. 1 லட்சம் கோடி பாதுகாப்பு நிதி மத்திய அரசு உருவாக்கியது. ரயில்வே கேட்டுகள் அனைத்தையும் ஆட்கள் உள்ளதாக மாற்றியது. தண்டவாள பராமரிப்பு நேரம் உருவாக்கியது. விபத்துகள் எண்ணிக்கை கடந்த இரண்டு நிதியாண்டுகளாக இரட்டை இலக்கத்தில் குறைந்தும் இருக்கிறது. உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் சோர்வு அடைந்து இருப்பவர் களால் விபத்துகள் நிகழ வாய்ப்புகள் அதிகம். ஒருபுறம் 60 வயதிற்கு மேற்பட்டவர்களை மூத்த குடிமகன்களாக கருதி ரயில்வே சலுகை வழங்குகிறது. மறுபுறம் அவர்களை கொண்டு ரயில்கள் இயக்க முனைகிறது. காலிப்பணியிடங்களை முன்கூட்டி நிரப்ப திட்டமிடாததே இதற்கு காரணம். எனவே இந்த திட்டத்தை ரயில்வே ஆணையம் கைவிட்டு தேர்வு ஆணைய நடைமுறைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றார்.

தெற்கு ரயில்வேயில் 835 என்ஜின்கள், 4 ஆயிரத்து 798 ரயில் ஓட்டுனர் பணியிடங்கள் உள்ளது. இதில் 539 காலியிடங்கள். தற்சமயம் 150 பேர் தேர்வு செய்யப்பட்டு ஓட்டுனர் பயிற்சியில் இருக்கிறார்கள். தேர்வு வாரியம் 528 உதவி ஓட்டுனர் பணியிடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்ய இருக்கிறது. இவர்கள் பணியில் சேர ஒரு ஆண்டுக்கு மேல் ஆகும். இதனால் தெற்கு ரயில்வே ஓய்வு பெற்ற ரயில் ஓட்டுனர்களை மீண்டும் பணியமர்த்த இருக்கிறது. ஓய்வு பெற்ற ரயில் ஓட்டுனர்களை தினக்கூலி அடிப்படையில் மீண்டும் பணியமர்த்த ரயில்வே முடிவு செய்துள்ளது. இதனால் விபத்துகள் நடக்க அதிக வாய்ப்பு உள்ளதால் அத்திட்டத்தை கைவிட்டு தேர்வு ஆணைய பணிகளை துரித படுத்த வேண்டுமென ரயில்வே தொழிற் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

- குருதேவ்


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 48615321**


**Email : writermouriyan@gmail.com**




வெளிநாட்டு கம்பெனியை நிர்வகிக்க ஆட்கள் இல்லை என்றும், அந்த கம்பெனியை எழுதி கொடுப்பதாகவும் கூறி ஆன்லைனில் பணம் மோசடி செய்யும் கும்பலிடம் விழிப்புடன் இருக்க போலீசார் அறிவுறுத்தியுள்ளனர். இதுகுறித்து போலீசார் கூறியதாவது: போலியாக இ-மெயில் முகவரியில் உலா வரும் மோசடி கும்பல், 'எங்களுக்கு வெளிநாட்டில் பல மில்லியன் டாலர் மதிப்புள்ள மிகப்பெரிய கம்பெனி இருக்கிறது. இதை நிர்வகிக்க ஆட்கள் இல்லை. எனவே, உங்களது விவரங்களை அனுப்பி வையுங்கள். உங்களது தகுதி எங்கள் கம்பெனியை நிர்வகிக்கும்படியாக இருந்தால், எங்கள் கம்பெனியை உங்கள் பெயருக்கு எழுதி கொடுத்துவிடுகிறோம்', என்னை கவனித்து கொள்ள ஆட்கள் இல்லை. எனது பெயரில் கோடிக்கணக்கில் சொத்து இருக்கிறது. இறப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் கடைசி கட்டத்தில் என்னை கவனித்து கொண்டால், என்னுடைய சொத்துகளை எழுதி கொடுக்கிறேன்' என்பது உள்ளிட்ட இ-மெயில் இதுதவிர பிரபல கம்பெனிகள் பெயரை பயன்படுத்தியும் இ-மெயில் அனுப்பி வைக்கப்படுகிறது.

அதில், 'எங்களது நிறுவனத்தில் இருந்து குலுக்கல் முறையில் நீங்கள் தேர்வாகி உள்ளீர்கள். உங்களுக்கு 1 கோடி பரிசுத்தொகை விழுந்துள்ளது. உங்களது பான் கார்டு எண், வங்கி கணக்கு எண் உள்ளிட்ட முழு விவரங்களை அனுப்பி வையுங்கள்' என்று குறிப்பிடுகின்றனர். இதுபோன்ற போலியான இ-மெயில் செய்திகளை நம்பியவர்கள் கோடிக்கணக்கில் பணம் கிடைக்கிறது என்ற நம்பிக்கையில், முழு விவரங்களையும் அனுப்பிவிடுகின்றனர். அடுத்தக்கட்டமாக உங்கள் பெயருக்கு வர வேண்டிய

தொகை வருவதற்கு இந்தியாவில் இருந்து வரிப்பணமாக குறைந்தப்பட்ச தொகை 35 ஆயிரம் செலுத்த வேண்டும் என்று வங்கி கணக்கை அனுப்பி வைக்கின்றனர். குறைந்த தொகை செலவழித்தால், பல கோடி சொத்துகள் வருகிறது என்ற நம்பிக்கையில் சிலர் கடன் வாங்கியாவது குறிப்பிட்ட தொகையை, சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் டெபாசிட் செய்துவிடுகின்றனர். அதற்கு பிறகுதான் ஏமாற்றம் அடைந்ததை உணர்கின்றனர்.



இதுபோன்று ஏமாற்றப்பட்டவர்களில் ஒரு சிலருக்கு, 'நீங்கள் தற்போது வெளிநாட்டில் உள்ள கம்பெனிக்கு உரிமையாளராகி விட்டீர்கள். உங்களை பினாமியாக சேர்த்துவிட்டோம். தற்போது, இந்த விஷயத்தை யாருக்கும் சொல்லாதீர்கள். இங்குள்ள சிறிய பிரச்னைகளை தீர்ந்துவிட்ட பிறகு நாங்களே கூப்பிடுகிறோம்' என்று மோசடி கும்பலை சேர்ந்தவர்கள் இ-மெயில் அனுப்புகின்றனர். இதையும் ஒரு சிலர் நம்பியிருக்கிறார்கள். சில மாதங்கள் கழித்துதான் அவர்களும் மோசடி செய்யப்பட்டதை தெரிந்து கொள்கின்றனர். எனவே, இதுபோன்ற மோசடி கும்பல்களை நம்பி ஏமாறாமல் விழிப்புடன் இருக்க வேண்டும். இணையதளங்களில் பழகுபவர்களிடம் உங்களது முழு விவரத்தையும் தெரிவிக்க கூடாது. உங்களது விவரங்களை தெரிந்து கொள்பவர்கள் தொடர்ந்து பல்வேறு தொல்லைகளை கொடுக்க நேரிடும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ஒரு சிலரது செல்போன் எண்ணுக்கு பிரபல கம்பெனிகள் பெயரில் குறுஞ் செய்தி அனுப்பும் கும்பல், 'எங்களது கம்பெனி ஆண்டுக்கு ஒருமுறை குலுக்கல் முறையில் செல்போன் எண்களை தேர்வு செய்து பரிசுத்தொகை வழங்கி வருகிறோம். அதன்படி, தற்போது உங்களுக்கு பரிசு விழுந்துள்ளது. எனவே, உங்களது விவரங்களை அனுப்பி வையுங்கள்' என்று குறிப்பிடுகின்றனர். தொடர்ந்து பரிசுத்தொகை வழங்குவதற்காக வரிப்பணம் ஆகியவற்றை முன்கூட்டியே செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்ட தொகையை கேட்கின்றனர். இதுபோன்ற மோசடி கும்பலிடமும் சிலர் ஏமாற்றம் அடைகின்றனர். எனவே, செல்போன் பயன்படுத்துவதிலும் விழிப்புணர்வு தேவை என்று போலீசார் கூறுகின்றன.

**- வீ. சிவசங்கரன்**



# ஆபாச படங்கள்தான்
## கள்ளக்காதல், வன்கொடுமைக்கு காரணமா?

கள்ளக்காதல் மற்றும் குழந்தைகள் வன்கொடுமை அதிகரிப்புக்கு சமூக வலைதளங்களில் பரவும் ஆபாச படங்களே காரணம் என்று சென்னை உயர் நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது சேலம் மாவட்டத்தை சேர்ந்த பெண் ஒருவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில், 'திருச்செங்கோடு கல்லூரியில் படிக்கும் 19 வயதாகும் தனது இளைய மகளை கடந்த பிப்ரவரி மாதம் முதல் காணவில்லை. இதுகுறித்து திருச்செங்கோடு போலீசில் புகார் செய்தும், இதுவரை கண்டுபிடிக்கவில்லை. எனவே, எனது மகளை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த போலீசாருக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் என்.கிருபாகரன், அப்துல் குத்தூஸ் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்சில் விசாரணைக்கு வந்தது. அப்போது, கல்லூரியில் படிக்கும் மனுதாரரின் 19 வயது மகள், திருமணமான தன்னுடைய மாமா லோகநாதனுடன் சென்றுள்ளதும், அந்த லோகநாதனுக்கு ஏற்கனவே திருமணமாகி குழந்தையும் உள்ளது என்பதும் தெரியவந்தது.

இதைக்கேட்ட நீதிபதிகள், நடிகைகள் காணாமல் போனால் மட்டும் நடவடிக்கை எடுக்கும் காவல்துறை மகள் காணவில்லை என்று பெற்றோர் புகார் கொடுத்தும் 4 மாதங்களாகியும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பியதுடன் திருச்செங்கோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் நேரில் ஆஜராகி, மனுதாரர் கொடுத்த புகார் மீது ஏன் வழக்குப்பதிவு செய்யவில்லை என்பதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்று உத்தரவிட்டனர். இந்த வழக்கு நீதிபதி கிருபாகரன் மற்றும் அப்துல் குத்தூஸ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஏற்கனவே இதேபோன்ற வழக்கில் உயர் நீதிமன்றம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்து சட்டம் ஒழுங்கு உதவி ஐஜி ஒரு மனுவை தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், கடந்த 10 ஆண்டுகளில் சென்னை மாநகரில் கள்ளக்காதல் காரணமாக 158 கொலைகள் நடந்துள்ளன. சென்னை தவிர தமிழகம் முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் இதுபோன்ற கள்ளக்காதல் விவகாரத்தால் 1301 கொலைகள் நடந்துள்ளன. கள்ளக்காதல் காரணமாக கொலை இல்லாமல் சென்னையில் மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் 213 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை தவிர தமிழகம் முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 621 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கூறப்பட்டிருந்தது. அந்த பட்டியலைப் பார்த்த நீதிபதிகள், இந்த விஷயத்தில் நாங்கள் 18 கேள்விகள் கேட்டிருந்தோம். 2 கேள்விகளுக்கு மட்டும் பதில் தரப்பட்டுள்ளது. மத்திய அரசு தரப்பில் எந்த பதிலும் தரப்படவில்லை. ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களில் தவறான தொடர்பு காரணமாக நடைபெறும் கொலை மற்றும் குற்றங்கள் தொடர்பான செய்திகள் வருகின்றன. குடும்ப வாழ்க்கையை பாதிக்கும் இதுபோன்ற சமூக பிரச்னைகளை தீர்க்க அரசு யோசனை செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நடந்ததாக தெரியவந்தால் அதற்கான அடிப்படை காரணத்தை போலீசார் முதலில் ஆராய வேண்டும். அதன் அடிப்படையில் குற்றவாளியை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், செல்போன் எப்படி பயன்படுத்துவது என்று தெரியாமல் இன்றைய இளைய தலைமுறை உள்ளது என்றும், செல்போன்களில் வரும் ஆபாச படங்களை பார்த்து சமுதாயம் சீரழிகிறது. கள்ளக்காதல் மற்றும் குழந்தைகள் வன்கொடுமைக்கு காரணம் இணைதளங்களில் பரவும் ஆபாச படங்களே காரணம்.

எனவே, இந்த தவறான உறவால் கடந்த 10 ஆண்டுகளில் சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் நடந்த ஆள் கடத்தல், தற்கொலை, தாக்குதல் ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்களை போலீசார் தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு வரும் ஜூலை 5ம் தேதிக்கு தள்ளிவைக்கப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.





**- கனகதுர்கா**

# திட்டமிட்ட சதியா?

# குடிநீர் பஞ்சம்!





தண்ணீருக்காக பொதுமக்கள் பரிதாபமாக அலையும் நிலையில், சென்னை மற்றும் அதன் புறநகரில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் வர்த்தக ரீதியில் நிலத்தடி நீரை உறிஞ்சி வாட்டர் கேன்களில் அடைத்து விற்பனை செய்யும் தொழில் கொடிகட்டி பறப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக அரசியல்வாதிகளுக்கு அதிகாரிகள் வளைந்துபோனதால் சென்னையில் குடிநீர் பஞ்சம் சதி செய்து திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. தமிழகத்தில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. குறிப்பாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஒரு குடம் தண்ணீருக்காக ஆண்களும், பெண்களும் மணிக்கணக்கில் காத்திருக்கும் நிலை உள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ளவர்கள் லாரி தண்ணீரை எதிர்பார்த்து இருக்கிறார்கள். சில இடங்களில் மெட்ரோ லாரிகளில் வரும் தண்ணீரை கூட ஒரு குடம் ₹5 முதல் ₹10 வரை கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது.

இந்த திடீர் குடிநீர் பஞ்சமல்ல தண்ணீர் பஞ்சத்துக்கு முக்கிய காரணம், சென்னை மெட்ரோ வாட்டர் அதிகாரிகள்தான் என்றும் சமூக நல ஆர்வலர்கள், பொதுமக்கள், கீழ் நிலை அதிகாரிகள் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறார்கள். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இந்த அளவுக்கு தண்ணீர் மற்றும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டதற்கு காரணம் குறித்து சென்னை மாநகர பொதுமக்கள் சிலர் கூறியதாவது:

சென்னையில் நாங்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறோம். இந்தளவுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டதே இல்லை. இப்போது ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு முழுக்க முழுக்க அமைச்சர்கள், துறை சார்ந்த அரசு அதிகாரிகள்தான் காரணம். முன்பெல்லாம் வீடுகளுக்கு வரும் கார்ப்பரேஷன் தண்ணீரையே குடிக்க பயன்படுத்துவோம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக வாட்டர் கேன், வாட்டர் பாட்டில் விற்பனை அதிகரித்துள்ளது. இந்த தண்ணீரை குடித்தால்தான் வியாதி வராது என்று ஒரு தகவலை மக்கள் மத்தியில் பரப்பி விட்டனர்.

அதனால், இப்போது வாட்டர் கேன்களை விலைக்கு வாங்கி சென்னைவாசிகள் அனைவரும் பயன்படுத்துகிறார்கள். கார்ப்பரேஷன் குழாய் மூலம் வரும் தண்ணீரை பொதுமக்கள் குளிக்கவும், துவைக்கவும்தான் பயன்படுத்துகிறார்கள். இதை பயன்படுத்தி வாட்டர் கேன் பிசினஸ் சென்னை மற்றும் புறநகர் பகுதியில் கொடிகட்டி பறக்கிறது. முன்பெல்லாம் இதுபோன்ற வாட்டர் கேன் கம்பெனிகள் சென்னை புறநகர் பகுதிக்கும் வெளியே குடியிருப்புகள் இல்லாத பகுதிகளில் நிலத்தடி நீரை உறிஞ்சி, அதை சுத்திகரித்து கேன்களில் நிரப்பி சப்ளை செய்யும் நிலை இருந்தது. இதன்மூலம் அதிக வருமானம்

கிடைக்கிறது என்பதாலும், பொதுமக்கள் அனைவரும் கேன் வாட்டரை மட்டும்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொண்டு சமீபகாலமாக வாட்டர் கேன் பிசினஸில் பலர் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்படி வாட்டர் கேன் பிசினஸ் பண்ணுகிறவர்கள், சென்னை புறநகர் பகுதிகளில் தங்கள் கம்பெனிகளை வைக்காமல் தற்போது சென்னை நகர் பகுதிகளில் முக்கியமாக குடியிருப்புகள் அதிகம் உள்ள பகுதிகளிலேயே தொழிற்சாலையை மறைமுகமாக வைத்து தொழில் செய்யும் நிலை உள்ளது. இதுபோன்ற நிறுவனங்களை வெளியில் இருந்து பார்த்தால், நிலத்தடி நீரை உறிஞ்சி அதை வாட்டர் கேன்களில் சப்ளை செய்வது போன்று எளிதில் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ரகசியமாக செய்கிறார்கள்.

வழக்கமாக, ஒரு ஆண்டு மழை பொய்த்துவிட்டால் குடிநீர் ஏரிகளில் உள்ள தண்ணீர் குறையும், வீடுகளில் உள்ள ஆழ்துழை கிணறுகளில் தண்ணீர் கீழே இறங்கும். இதனால் விட்டு விட்டு மோட்டார் போட்டால் தண்ணீர் பிரச்னையை சமாளிக்க முடியும். ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. அதாவது நிலத்தடி நீரே இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம், இதுபோன்ற வாட்டர் கேன் நிறுவனங்கள் 500 முதல் 1000 அடி வரை போர் போட்டு நிலத்தடி நீரை உறிஞ்சி விட்டார்கள். சாதாரணமாக குடியிருப்புகளில் 200 முதல் 300 அடி வரையே போர் போட்டு தண்ணீர் எடுப்பார்கள். இப்படி 500 அல்லது 1000 அடி போர் போட்டதால் தண்ணீர் மட்டம் பல நூறு அடி குறைந்துவிட்டது. இதுபோன்ற நிறுவனங்களால் பல லட்சம் குடியிருப்புகளில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்கை தண்ணீர் பஞ்சத்துக்கு இதுவும் மிகவும் முக்கிய காரணமாகும்.



இனியாவது குடிநீர் வாரிய அதிகாரிகள் சுதாரித்துக் கொண்டு, லஞ்சம் வாங்காமல் இதுபோன்ற குடியிருப்பு பகுதிகளில் வாட்டர் கேன் நிறுவனங்கள் வைத்திருப்பவர்களை அடையாள கண்டு அல்லது பொதுமக்கள் புகார் அளித்தால் உடனடி சோதனை செய்து அந்த கம்பெனிகளை நிரந்தரமாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி செய்தால்தான் இனி வரும் காலங்களில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வாழ முடியும் அல்லது வாழ தகுதி இல்லாத நகரமாக சென்னை மாறிவிடும் என்பது தான் உண்மை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

தண்ணீர் விஷயத்தில் வாட்டர்கேன் தயாரிப்பாளர்கள் பலரின் பிடி அரசியல்வாதிகளிடம் சிக்கி உள்ளது. இதனால் அவர்கள் தயவுடன் குடிநீர்வாரிய அதிகாரிகளை மடக்கி போட்டு அவர்களுக்கு லட்சக்கணக்கில் லஞ்சம் கொடுத்து அமுக்கி வைத்துள்ளனர். சுகாதாரதுறை அலுவலவர்களும் இப்போது சோதனையை குறைத்துவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கு பருவமழை பொய்த்துபோனது, வறட்சி போன்ற காரணங்களை சுட்டிகாட்டி கேன் நிறுவனங்கள் சேலம், நாமக்கல் பகுதியில் இருந்து ஏராளமான போர்வெல்களை அமைக்கும் நிறுவனங்களை அழைத்து பல ஆயிரம் அடியில் ஆழ்துளை கிணறு அமைத்து அந்த தண்ணீரை சுத்திகரித்து கேனில் அடைத்து பல்லாயிரம் கோடி சம்பாதித்துள்ளனர்.

அந்த வகையில் கடந்த 6 மாதங்களில் மட்டும் தமிழகம் மற்றும் மத்திய அரசுக்கு நேரடியாக வருவாய் இழப்பு என்ற வகையில் பல கோடிகளை தாண்டும். அதற்கு பதிலாக அரசியல்வாதிகள், குடிநீர் வாரிய அதிகாரிகளுக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுத்து அவர்கள் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

**- M. தரணி**



# சிந்தனை முத்துக்கள்















கொசு கடிக்குதேனு ஆல் அவுட் போட்டேன்,
அப்ப ஒரு கொசு சிரிச்சுட்டே காதுல வந்து சொல்லுது,
#ஏன்டா இன்னுமாடா விளம்பரத்த பாத்து ஏமாந்துட்டு இருக்கிங்கனு...



ஐந்தாம் வகுப்பு படிக்கும் மானவன் கேள்விக்கு பதில் எழுதி உள்ளான் இதை அதிகம் பகிருங்கள்



என்னப்பா பால் இவ்ளோ திக்கா இருக்கு ...



என்ன பண்றது சார்..
தண்ணீர் கஷ்டம் அதான்...

நாட்டுல இப்பல்லாம் குக் பண்ணி சாப்புடறவங்கள விட...



புக் பண்ணி சாப்புடறவங்கதான் அதிகம்...

மழலைகளே! என்றும் மறவாதீர்...!
நாங்கள் தான் தமிழில் உயிரெழுத்துகள் “அ, ஆ, இ, ஈ,... ”

அ' முதல் ஆய்தயெழுத்து வரை நான்
அழகில் தொடங்கி ஆயுள் வரை நான்
அன்பில் தொடங்கி ஆயுதம் தொலைத்த என்னை
“ஆங்கிலம்” மறைத்திடுமா?

- *அன்புடன்*
**தமிழ்**





















## இன்றைய சூழ் நிலைக்கேற்ப ஒரு பாடல்!

நண்பர்கள் பகைவர்கள் யாரென்றும்
நல்லவர் கெட்டவர் யாரென்றும்
நண்பர்கள் பகைவர்கள் யாரென்றும்
நல்லவர் கெட்டவர் யாரென்றும்
பழகும் போதும் தெரிவதில்லை
பாழாய்ப் போன இந்த பூமியிலே
பழகும் போதும் தெரிவதில்லை
பாழாய்ப் போன இந்த பூமியிலே

முகத்துக்கு நேரே சிரிப்பவர் கண்கள்
முதுகுக்கு பின்னால் சீறும்
முகஸ்துதி பேசும் வளையும் குழையும்
காரியமானதும் மாறும்
காரியமானதும் மாறும்

கடவுள் தந்த பாடம்
இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ - இந்த
மனிதன் கொண்ட கோலம்
மனிதன் கொண்ட கோலம்

# கடல்நீர் குடிநீராகுமா?



சென்னை நெம்மேலியில் ரூ.1,689 கோடியில் செயல்படுத்தப்பட உள்ள கடல் நீரை குடிநீராக்கும் இரண்டாவது ஆலைக்கு முதல்வர் பழனிசாமி, துணைமுதல்வர் பன்னீர்செல்வம் உள்பட அமைச்சர்கள் இன்று அடிக்கல் நாட்டினர். சென்னையில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் சென்னை நெம்மேலி பகுதியில் கடல்நீரை குடிநீராக்கும் இரண்டாவது ஆலையை அமைக்க திட்டமிடப்பட்டது. அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம் நெம்மேலியில் இன்று முதல்வர் பழனிசாமி கடல்நீரை குடிநீராக்கும் புதிய ஆலைக்கு அடிக்கல் நாட்டினார்.

நெம்மேலி பகுதியில் ஏற்கனவே கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட கடல் நீரை குடிநீராக்கும் ஆலை நாள் ஒன்றுக்கு 110 மில்லியன் குடிநீரை வழங்கி வருகிறது.

இதனைத் தொடர்ந்து ரூ.1,689 கோடி மதிப்பில் இரண்டாவது ஆலை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆலை நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கும் என்றும், இது தென்சென்னை மக்களின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆலையில் இருந்து கிடைக்கும் நீர் மூலம் வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையர் மலை, மேடவாக்கம், கோவிளம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசம்பேட்டை, சோழிங்கநல்லூர், மடிப்பாக்கம், உள்ளகரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 9 லட்சம் மக்கள் பயன் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு 1,689 கோடி செலவிடப்பட உள்ள நிலையில், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கே.எஸ்.டபிள்யூ நிறுவனம் நிதியுதவி செய்ய உள்ளது. அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் பழனிசாமி, துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, செங்கோட்டையன், பாண்டியராஜன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அடிக்கல் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து முதலாவது ஆலையின் செயல்பாடுகள், நீர் சுத்திகரிப்பு முறை உள்ளிட்ட பணிகளை முதல்வர் ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் பழனிசாமி, தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள புதிய ஆலை 2021ம் ஆண்டு நடைமுறைக்கு



கொண்டுவரப்படும். இதே போன்று பேரூர் பகுதியில் 400 மில்லியன் லிட்டர் குடிநீரை விநியோகிக்கும் வகையில், புதிய கடல் நீரை கடிநீராக்கும் திட்டம் அமைக்கப்பட உள்ளது. இதற்கு ரூ.6 ஆயிரத்து 78 கோடி செலவாகும். ஜப்பான் நிறுவனத்தின் உதவியோடு, மத்திய அரசின் அனுமதி பெற்ற பின்னர் இந்த திட்டம் தொடங்கப்படும் என்று முதல்வர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

**- ஆசிரியர்**


**வாழ்க தமிழ்!** **வளர்க தமிழகம்!!**

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-8 இதழ்-2 ஜூலை-2019**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V. **அருணாச்சலம்**, A.C. **குமார்**, S. **அனந்த கிருஷ்ணன்**, M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், N.சீனிவாசன்
R.பார்த்தசாரதி, G.ஆனந்த்குமார், S.மோகன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# உணவுக் கழிவுகளை 100% உரமாக்க நடவடிக்கை

சென்னை மாநகராட்சி உணவுக் கழிவுகளை 100 சதவீதம் உரமாக்க எடுத்துவரும் நடவடிக்கைகளால், குப்பை கிடங்குகளுக்கு செல்லும் ஈரக் கழிவுகளின் அளவு வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் பாதியாக குறையும் என்று மாநகராட்சி ஆணையர் கோ.பிரகாஷ் தெரிவித்தார். சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து தினமும் 5,400 டன் குப்பை அகற்றப்படுகின்றன. அவை மக்கும் குப்பை, மக்கா குப்பை என வகை பிரிக்கப்படுகிறது. மக்கும் குப்பைகள் அறிவியல் முறையில் இயற்கை உரம், சமையல் எரிவாயு, மின்சாரம் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு அறிவியல் முறையில் குப்பைகளை அழிக்கும் மாநகராட்சியின் நடவடிக்கையால், கிடங்குகளுக்கு செல்லும் குப்பையின் அளவு குறைகிறது.



கடந்த 2016-17-ல் மாநகரில் உள்ள 17 லட்சம் குடியிருப்புகளில் இருந்து தினமும் 5,249 டன் குப்பை வெளியேற்றப்பட்டன. அதில் 200 டன், அதாவது மொத்த குப்பையில் 4 சதவீதம் மட்டுமே அறிவியல் முறையில் அழிக்கப்பட்டன. தேசிய தூய்மை நகரங்கள் பட்டியலில் சென்னை பின்தங்கியதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. இந்நிலையில், அறிவியல் முறையில் குப்பையை அழிப்பது அதிகரித்துள்ளது. தற்போது மக்கும் குப்பைகள் 176 மையங்களில் இயற்கை உரம், எரிவாயு மற்றும் மின்சக்தியாக மாற்றப்பட்டு வருகிறது.

மேலும், அதிக அளவு குப்பையை உற்பத்தி செய்யும் ஹோட்டல்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, உணவு மற்றும் சமையலறை கழிவுகளை, அவர்களது இடத்திலேயே இயற்கை உரமாக மாற்ற மாநகராட்சி அறிவுறுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, மாநகராட்சி பூங்காக்களில் உருவாகும் இலைக் கழிவுகளை, குப்பை கிடங்குகளுக்கு கொண்டு செல்லாமல், அந்தந்த பூங்காவிலேயே 4 அடி ஆழத்துக்கு குழிகள் வெட்டி, மூங்கில் தட்டிகளைக் கட்டி, அவற்றில் சேமித்து உரமாக்கப்பட்டு வருகிறது. வீடுகளில் பெறப்படும் உணவு மற்றும் சமையலறைக் கழிவுகளை, பயனற்ற பிளாஸ்டிக் குடிநீர் தொட்டிகளில் கொட்டி மக்கச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி ஆணையர் கோ.பிரகாஷ் கூறியதாவது:

வீடுகளில் இருந்து பெறப்படும் உணவு மற்றும் சமையலறைக் கழிவுகள் உள்ளிட்ட ஈரமான கழிவுகளை 100 சதவீதம், குப்பை கிடங்குகளுக்கு கொண்டு செல்வதை தடுத்து, அவற்றை மக்கச் செய்து உரமாக்க திட்டமிட்டுள்ளோம். அதன்படி, பல இடங்களில் பயனற்ற பிளாஸ்டிக் கழிவுநீர் தொட்டிகளை நிறுவி, வீடு வீடாக பெறப்படும் மக்கும் தன்மையுள்ள ஈரமான கழிவுகளை அதில் கொட்டி, மக்கச் செய்து உரமாக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக, பயனற்ற தொட்டிகளை வழங்குமாறு குடிநீர் வாரியத்திடம் கேட்டுள்ளோம்.

குப்பையை உரமாக்கும் மையங்கள் அதிகரிப்பு, கழிவுகளில் இருந்து எரிவாயு, மின்சாரம் தயாரிப்பு, ஹோட்டல்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் உருவாகும் கழிவுகளை அங்கேயே மக்கச் செய்வது போன்ற பணிகளால் கொடுங்கையூர், பெருங்குடியில் உள்ள குப்பைக் கிடங்களுக்கு செல்லும் குப்பையின் அளவு தற்போது 400 டன் வரை குறைந்துள்ளது. பிளாஸ்டிக் தொட்டிகளில் உணவுக் கழிவுகளை கொட்டி உரமாக்குவதன் மூலம், மேலும் 300 டன் ஈரக் கழிவுகள் கிடங்குகளுக்கு செல்வது தடுக்கப்படும். மாநகராட்சியின் இந்த நடவடிக்கைகளால், வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் மொத்த ஈரக் கழிவுகளில் 50 சதவீதம், குப்பை கிடங்குகளுக்கு செல்வது தடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**- B. நாராயணசாமி**

# ஒன்றுபட்டு வலிமை சேர்ப்போம்...

மக்கள் விசாரணை | அரசியல் தீர்ப்பு | அருணை முரசு ARUNAI MURASU

பீப்பிள் டுடே PEOPLE TODAY | நமது நகரம் | அரசியல் முத்திரை

பேனா முள் | திரை தீபம் | அதிரடி குரல் | கடல்சிற்பி KADAL CHIRPI

தொட்டில் செய்தி | சட்ட கேடயம் | விழா முரசு | ரிப்போர்ட்டர் வோர்ல்ட்

அதிரடி தீர்ப்பு | புரசை எக்ஸ்பிரஸ் | சிலந்தி வலை SILANTHI VALAI | மண்ணின் குரல்

அமுதம் ரிப்போர்ட்டர் | நுண்ணறிவு | வெற்றி யுகம் POLITICAL & CRIME MONTHLY

திங்கள் மலர் ENLIGHT THE PEOPLE | நாற்காலி செய்தி | போலீஸ் ரிப்போர்ட்டர் | உரிமை ரிப்போர்ட்டர் URIMAI REPORTER

கடல் துளிகள் KADAL THULIGAL | பாக்கியம் சினிமா BAKKIYAM CINEMA | தமிழன் குரல் | PRESS

மக்கள் பார்வை | வாசன் பார்வை | மக்கள் விருப்பம் MAKKAL VIRUPPAM | சேது நியூஸ்

THE DECEMBER MAIL | தொகுதி முரசு THOGUTHI MURASU | மூன்றாம் கண் | உள்ளாட்சி சுடர்

முள்ளும் மலரும் | DAILY INDIA NEWS | FACE NEWS | சென்னை செய்திகள் CHENNAI SEITHIGAL

பல்லவன் முரசு | நியூஸ் பிரிட்ஜ் NEWS BRIDGE | ஜித்தன் | விழிப்புணர்வின் குரல்

மெய் எழுத்து | தர்ம ராஜ்ஜியம் | FINE TIME | புதுவை ஒளி

வீரத்தலைமுறை | PEOPLE PLUS English & Tamil Weekly | ஸ்ரீ ஆஞ்சநேயர் விஜயம் | தொழில் பார்வை

முனைவர் **ஆ.மவுரியன்**



**வீர தமிழச்சிகளின் வரலாறு..!**

**21**



**பாரதத்தாயின் மூத்த மகள் வீரத்தியாகி**

# சொர்ணத்தம்மாள்

**சுதந்திர போராட்டத்தில் அடி, உதை, சிறை, சித்ரவதை, அவமானத்தையும் அனுபவித்தவர்**

இந்தியன் திரைப்படத்தில் ஒரு காட்சி. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட சுகன்யா (நடிகை) உள்ளிட்ட சில பெண்களை ஆங்கிலேய அரசின் போலீசார் கைது செய்து அவர்களின் ஆடைகளைக் குறைத்து ஊருக்கு வெளியே இருட்டான பகுதியில் விட்டுச் செல்வார்கள். திரையில் பார்ப்பவர்களை பதறவைத்தக் காட்சி இது. ஆனால் இந்த காட்சியின் ஒரிஜினல் ஹீரோயின் மதுரை சொர்ணத்தம்மாள். மதுரையில் கூட பலர் இந்த சொர்ணத்தம்மாளை அறிந்திருக்கவில்லை.

விடுதலை போரில் பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே "அனுபவித்து"க் கொண்டிருந்த அடி, உதை, சிறை, சித்ரவதை ஆகியவற்றையும் அதற்கு மேலாக அவமானத்தையும் அனுபவித்தவர் சொர்ணத்தம்மாள். மதுரை கடச்சனேந்தலில் வசித்து வந்தவர் சொர்ணத்தம்மாள். சுதந்திர போராட்ட தியாகி மதுரை எஸ். ஆர். என். ஷேசபாகவதரின் மனைவியாகிய இவர், கணவர் பணிபுரிந்த கம்பெனியில் சாதாரண வேலை பார்த்து வந்தார்.

கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டுக்கு சென்றிருந்த பாரதியாரைப் பார்த்து அன்னி பெசண்ட் அம்மையார் கேட்டார், "இந்த தேசத்தின் மக்கள் தொகையில் பாதியாக இருக்கும் பெண்களை நீங்கள் ஏன் சுதந்திர போராட்டத்தில் ஈடுபடுத்தவில்லை?" புதுமைக் கவிஞராகிய நீங்களே உங்கள் மனைவியை இம்மாநாட்டுக்கு அழைத்து வரவில்லையே, அப்படியிருக்கையில் உங்கள் போராட்டம் எப்படி வெல்லும்?" எனக் கேட்டு பாரதியாருக்கும் பாரத பெண்களுக்கும் விழிப்புணர்வு ஊட்டிய அன்னிபெசன்ட் அம்மையாரைப் பற்றியெல்லாம் அறிந்திருக்க வில்லை சொர்ணத்தம்மாள்.

அதுபோல 1930-களில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட கே.பி. ஜானகியம்மாள், கேப்டன் லெட்சுமி, ருக்மணி லெட்சுமிபதி, அம்மு சுவாமிநாதன், அம்புஜம்மாள், மீனா கிருஷ்ணசாமி, என்.எஸ். ருக்மணியம்மாள், நாகம்மையார் மற்றும் பத்மாசினி அம்மையார் ஆகியோர் சமூக, கல்வி, ஜாதி, பொருளாதார பின்புலம் கொண்டவர் களாய் இருந்தனர். ஆனால் மதுரை சொர்ணத்தம்மாள் இந்தப் பின்புலம் ஏதுமில்லாத சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். கணவர் சுதந்திரப் போராட்ட வீரர் என்பதால் சுதந்திர வேள்வியில் தன்னையும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய்தவர். "நாடு விடுதலையடையணும்" என்ற எண்ணம் அவரது மனதுக்குள் உலா வந்து

கொண்டிருந்தது. அத்தோடு "வந்தே மாதரம்" என்ற ஒற்றைச் சொல் அவருக்குத் தாரக மந்திரமாக இருந்தது. விடுதலைக்களத்தில் குதிக்க தயாரானார். அப்பொழுது அவருக்கு வயது 26.

நாடு சுதந்திரம் அடைய மகாத்மா கடைசி ஆயுதமாக "வெள்ளையனே வெளியேறு" கோஷத்தை முன்னெடுத்தார். இது நாடெங்கிலும் மூலை முடுக்கெங்கும் பரவிக் கொண்டிருந்த காலம். இதைத் தொடர்ந்து 1942-ல் தமிழகத்தின் தென் மாவட்டங்கள் முழுக்க சுதந்திரப் போராட்ட புயல் வீசியது.

அப்பொழுதெல்லாம் கதர் சட்டை, வேட்டி சேலை அணிந்தாலே போலீசார் லத்தியைச் சுழற்றுவார்கள். வந்தேமாதரம் என்று முணுமுணுத்தால் லத்தியால் அடித்து துவைத்து விடுவார்கள். முதல்முறையாக கணவருடன் மறியல் போராட்டத்திற்குச் சென்றார் சொர்ணத்தம்மாள். வந்தேமாதரம் எனக் கோஷமிட்டார். இவர் குரல் உச்சஸ்தாயியில் கேட்டது. கோஷமிட்ட சொர்ணத்தம்மாளை கைது செய்து ஒரு வாரம் சிறையில் அடைத்தனர். விடுதலையாகி வெளியில் வந்த சொர்ணத்தம்மாள் தம்பதியினர் மீண்டும் மறியலில் ஈடுபட்டு ஒரு மாதம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வெளியே வந்த அவர், "இந்த தேசம்



சுதந்திரம் அடைய வேண்டும், அதற்குரிய தருணம் இதுவே. நாம் தொடர் மறியலில் ஈடுபட வேண்டும் காந்தியடிகளின் உத்தரவே வேதவாக்கு" என்று வெளிப்படை கம்பீரமாகச் சொன்னார் சொர்ணத்தம்மாள். மூன்றாவது முறை கணவர் துணையின்றி மறியலில் ஈடுபட்டு கைதானார். இம்முறை அவர் வேலூர் சிறையில்



ஆறு மாதம் அடைக்கப்பட்டார். அப்போதும், ஆறுமாத சிறை தண்டனை முடிந்து வந்ததும் மீண்டும் மறியலுக்குத் தயாரானார்.

ஒவ்வொரு விடுதலைக்குப் பின்னும் மீண்டும் மீண்டும் மறியலில் ஈடுபட்டுக் கைதாகும் சொர்ணத்தம்மாளைக் கண்டு போலீஸ் நிர்வாகம் எரிச்சலடைந்தது. அடித்தும் சிறையில் போட்டும் கூட மீண்டும் மீண்டும் விடுதலைக் களத்தில் நிற்கிறாரே என்ற ஆத்திரம் வேறு. அதுமட்டுமின்றி சொர்ணத்தம்மாளின் தொடர் மறியல் என்பது பெண்கள் மத்தியில் எழுச்சியையும் ஏற்படுத்தியிருந்தது. பெண்களும் திரளாக மறியலில் கலந்து கொள்ளத் துவங்கினர். அதிலும் ஏழை, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பு அதிகமானது.. இதை முடக்க போலீஸ் திட்டமிட்டது.

இன்றைய பெண்களுக்கு உடை என்பது தங்களின் அழகு, செல்வாக்கு, ரசனை, கற்பனைத் திறன் ஆகியவற்றை அடையாளம் காட்டுவ தற்கான சாதனம். ஆனால் தியாகி சொர்ணத்தம் மாளுக்கு தான் அணியும் கதர் சேலை என்பது சுதந்திரப் போராட்டத்தின் அடையாளம். அதை விடுதலை இந்தியாவின் கொடியாக மதித்தார். அதை அவர் பெருமையாகவும் சொல்லிக் கொள்வார். அதை அவமதிப்பதன் மூலம் சொர்ணத்தம்மாளை அடக்கிவிடலாம் என போலீசார் கருதினர். அதையடுத்துத் அந்தக் கொடூரச் செயல் அரங்கேறியது.

பேட்டியில் தனது சுதந்திரப்போராட்ட வாழ்க்கை குறித்து சொர்ணத்தம்மாள் கூறுகையில்...

**- தொடரும்**

# அரசு பள்ளிகளில் கல்வி தரம் தாழ்ந்துவிட்டதா?

மாணவர் சே... ...தால் நாடு முழுவதிலும் ... மேற்பட்ட அரசுப் பள்ளிகள் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாகக் கடந்த சில ஆண்டு களாகவே பேசப்பட்டு வருகிறது. கல்வியை வியாபாரமாகத் தனியார் பள்ளிகள் மாற்றிவிட்டதும் அவற்றை அரசு தட்டிக்கேட்காமல் விடுவதும் இங்கே தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், அரசுப் பள்ளிகளில் தங்களுடைய குழந்தைகளைச் சேர்க்காமல் கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் தனியார் பள்ளிகளிடம் பல பெற்றோர் தஞ் சமடைவது ஏன்? அரசுப் பள்ளிகளில் தூய்மையான கழிப்பிட வசதி இல்லை, பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை என்பதில் தொடங்கி ஆசிரியர் பற்றாக்குறை, இப்படிப் பல 'ஏற்புடைய' காரணங்கள் இதுதொடர்பாக இருக்கவே செய்கின்றன. இவற்றைச் சீர்படுத்தாமல் அரசுப் பள்ளிகளைத் தேடி மக்கள் வருவது கடினமே.



ஆனால், தனியார் பள்ளிகளுக்கு இணையான வசதிகளையும் தரமான கல்வியையும் இந்திய அரசுப் பள்ளிகளால் வழங்க முடியுமா? நிச்சயமாக முடியும் என்று நிரூபித்திருக்கும் இரண்டு மாநிலங்களின் அரசுப் பள்ளிகள். முன்மாதிரியான டெல்லிப் பள்ளிகள் பாழடைந்த கட்டிடம், உடைந்து ஆட்டம்காணும் மேஜைகள், இருண்ட வகுப்பறைகள், பள்ளிக்குப் புத்தகங்களை எடுத்துவருவதைக் காட்டிலும் ஸ்க்ருடிரைவர், போதை மருந்துகளை எடுத்துவரும் மாணவர்கள் என்பதுதான் நான்காண்டுகளுக்கு முன்புவரை இந்தியாவின் தலைநகர் டெல்லி அரசுப் பள்ளிகளின் நிலை. அங்கு 1,028 அரசுப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 450-க்கும் மேற்பட்டவை முன்மாதிரி அரசுப் பள்ளிகளாக இன்று மாற்றப்பட்டிருக்கின்றன. 'Model school' என்று அழைக்கப் படும் இந்த முன்மாதிரி அரசுப் பள்ளிகளில் இணைய வசதி, லேப்டாப், புரொஜெக்டருடன்கூடிய 8,000 ஹைடெக் வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உறுதியான, அழகான மேஜைகளும் இருக்கைகளும் பொருத்தப் பட்டுள்ளன. குளிரூட்டப்பட்ட உள் அரங்குகள், பரந்துவிரிந்த தூய்மையான விளையாட்டுத் திடல், பள்ளி வளாகத்தின் சுற்றுச்சுவரில் கண்கவர் ஓவியங்கள், நீச்சல்குளம் என இந்தப் பள்ளிகள் தற்போது செயல்பட்டுவருகின்றன. அரசுப் பள்ளிகளைக் கண்டு ஒதுங்கச் செய்பவற்றில் ஒன்று கழிப்பிடங்களின் நிலை. இந்தப் பள்ளிகளில் கழிப்பிடங்களும் நவீனப்படுத்தப்பட்டுத் துப்புரவாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவை சாத்தியப்பட முழு முதற்காரணம், டெல்லி அரசு கடந்த நான்காண்டுகளாக மாநில பட்ஜெட்டில் 26 % நிதியைக் கல்விக்கு ஒதுக்கி முறையாகச் செலவழித்துவருகிறது.

தங்களுடைய பாடப் புத்தகத்தை எழுத்துக்கூட்டி வாசிக்கத் தெரியாமல் ஆறு-எட்டாம் வகுப்பு மாணவர்கள் இருப்பதை மாற்றச் சிறப்புப் பயிலரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பப் பள்ளி முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு யோகா பயிற்றுவித்தல், சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தும் கதைகளைச் சொல்லுதல் உள்ளிட்டவை மகிழ்ச்சி பாடத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ளன. 2018-ல் பிளஸ் 2 பொதுத் தேர்வில் 90.64% டெல்லி அரசுப் பள்ளி மாணவர்கள் தேர்ச்சி அடைந்ததன் மூலம் தேசிய அளவில் கவனம் ஈர்த்தனர். பெருமிதம் நிறைந்தது ஆசிரியப் பணி என்பதை ஒவ்வோர் ஆசிரியருக்கும் உணர்த்த இங்கே பல திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

தலைமைப் பண்புத் திட்டத்தின் கீழ் அனைத்து அரசுப் பள்ளி முதல்வர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. 30 ஆயிரம் டெல்லி ஆசிரியர்களுக்குக் கடந்த ஆண்டு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்பட்டது. சிங்கப்பூரில் உள்ள தேசியக் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற பயிலரங்கத்துக்கு 400 ஆசிரியர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள்.



ஆண்டுதோறும் சிறந்த ஆசிரியர்கள் 50 பேரைத் தேர்ந்தெடுத்துக் கோலாகலமாக விழா எடுத்து விருதுகள் வழங்கப்பட்டுவருகின்றன. தட்டிக்கேட்கும் அதிகாரம்பெற்றோருக்கு, பள்ளி முதல்வரின் தரிசனமே காணக் கிடைக்காத ஒன்றாகத் தனியார் பள்ளிகள் மாறிவிட்டன. இதற்கு நேரெதிரான சூழல் இங்குக் கவனமாக உருவாக்கப் பட்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாக, தேசியப் பாடத்திட்ட வடிவமைப்பு 2005-ன் பரிந்துரைப்படி பள்ளிதோறும் பள்ளி மேலாண்மை கமிட்டி நிறுவப்பட்டிருக்கிறது.

பெற்றோர், பள்ளித் தலைமை யாசிரியர், ஆசிரியர், எம்.எல்.ஏ. பிரதிநிதி உள்ளடங்கிய குழு இது. 16 பேர் கொண்ட கமிட்டியில் 75% பெற்றோர் இடம் வகிக்கின்றனர். இவர்கள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வாக்குப் பதிவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இந்தக் குழு விடம் ரூ. 5-7 லட்சம் நிதி வழங்கப்படுகிறது. அரசுப் பள்ளியில் வழங்கப்படும் மதிய உணவின் தரத்தைச் சோதிக்க, வளாகத்தைப் பார்வையிட, ஆசிரியரின் வருகையைக் கண்காணிக்க, பாடத்திட்டத்தில் ஆலோசனை வழங்க இவர்களுக்கு அதிகாரம் உள்ளது.இவ்வாறாகப் பள்ளியின் செயல்பாட்டை நிர்வகிப்பதில் பெற்றோருக்கும் பங்குண்டு என்ற திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறது டெல்லி பள்ளிக் கல்வித் துறை. டெல்லியைச் சேர்ந்த அனைத்துப் பள்ளி மேலாண்மை கமிட்டிகளும் வாட்ஸ் அப் மூலம் இணைக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் டெல்லியின் ஏதோவொரு மூலையில் இருக்கும் பள்ளி எதிர்கொள்ளும் சிக்கலையும் உடனுக்குடன் கல்வி அமைச்சர் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்த முடியும். மொத்தத்தில் மகிழ்ச்சியான மனநிலையில் படிப்பதற்கான இடமாக டெல்லியின் அரசுப் பள்ளிக்கூடங்கள் மாற்றப் பட்டிருக்கின்றன.

கேரளம் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு பள்ளி என்ற விகிதாசாரத்தில் தங்களுடைய மாநிலத்தில் 149 பள்ளிகளை, கேரள அரசு 2016-ல் தேர்ந்தெடுத்தது. அவை 'Centre for Excellence' என்ற நிலையை எட்டுவதற்கான பணி முன்னெடுக்கப் பட்டது. ஒவ்வொரு பள்ளிக்கென ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டது.அனைத்து மலையாள வாரியப் பள்ளிகளிலும் ஆங்கில மொழி சோதனைக்கூடம் உள்ளிட்ட ஆங்கிலம் கற்பிப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இணைய வசதி, லேப்டாப், புரொஜக்டருடன் கூடிய 45 ஆயிரம் ஹைடெக் வகுப்பறைகளும் உருவாக்கப்பட்டன.

அரசியல்வாதிகளின் வாரிசுகள் அரசியல்வாதிகள் தங்களுடைய குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்க்கும் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. காங்கிரஸ் எம்.எல்.ஏ. வி.டி.பல்ராம், சி.பி.எம். எம்.பி. எம்.பி.ராஜேஷ், எம்.எல்.ஏ. டி.வி.ராஜேஷ் ஆகியோர் தங்களுடைய குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்த்தார்கள். இவர்களில் எம்.பி.ராஜேஷ் கேந்திரிய வித்யாலயாவில் படித்து வந்த தன்னுடைய மூத்த மகளை அரசுப் பள்ளிக்கு மாற்றினார். மாணவர் சேர்க்கைக் குறைவால் மூடும் நிலையில் தத்தளித்துக்கொண்டிருந்த கேரள அரசுப் பள்ளிகளில் 6.3 சதவீதம் கூடுதல் மாணவர் சேர்க்கை கடந்த இரண்டாண்டுகளில் நிகழ்ந்துள்ளது. மறுபுறம் தனியார், அரசுதவி பெறும் பள்ளிகளில் சேர்க்கை 8 சதவீதம் குறைந்ததுள்ளது.

இது கடந்த 25 ஆண்டுகளில் கேரளக் கல்வித்



துறையில் நிகழ்ந்த இமாலய சாதனையாகப் பார்க்கப்படுகிறது. கல்வித் தரம், பள்ளிக்கூடங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் இவை இரண்டையுமே வலுப்படுத்துவதன் மூலமாக மட்டுமே அரசுப் பள்ளிகளில் சேர்க்கையை அதிகரிக்க முடியும் என்பதை இந்த முன்னுதாரணங்கள் உணர்த்துகின்றன.தமிழகத்திலும் மிகச் சிறப்பாகச் செயல்படும் அரசுப் பள்ளிகள் ஆங்காங்கே இருக்கின்றன. அவை அந்தந்தப் பள்ளியில், பகுதியில் கல்விமீது அக்கறை கொண்டவர்களின் தனிப்பட்ட முயற்சியால் சாத்தியப்பட்டிருக்கிறது.

**- ஆசிரியர்**

# முகிலன் எங்கே?

**முகிலனின் சமூக அக்கறையைக் கண்டு அவருக்கு நாளுக்கு நாள் ஆதரவு எப்படி பெருகி வருகிறதோ அதைப்போலவே மறைமுக எதிர்ப்பும் பெருகிக் கொண்டே போகிறது.**

மனிதனால் உருவாக்க முடியாத இயற்கை வளங்களை கொள்ளையடிக்கும் கும்பல்களுக்கு எதிராக போராட முகிலன் திட்டமிடுகிறார். மணல் கொள்ளையை தடுக்க முகிலன் போராடு கிறார். மீண்டும் முகிலன் முகம் தெரியாத மனிதர்களால் கடுமையாக தாக்கப்படுகிறார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முகிலனிடம், மனைவி பூங்கொடி "உயிரே போனாலும் உங்களது கொள்கை லட்சியத்திலிருந்து பின் வாங்கி விடாதீர்கள். எது வந்தாலும் பார்த்துக்



கொள்ளலாம்" என்று சொல்ல, முகிலன் முன்பைவிட புத்துணர்வு பெற்றவராக மருத்துவமனையிலிருந்து மீண்டு வருகிறார்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிராக நாள் தோறும் புதுப்புது விதத்தில் போராட்டம் நடத்துகிறார் முகிலன். இதனால் அரசு இவர் மீது பல்வேறு வழக்குகள் போட்டு



## விடை காணாத மர்மங்கள்!

சிறையில் அடைக்கிறது. வெளியில் வந்ததும் அடுத்த போராட்டத்திற்கு ஆயத்தமாகி நடத்த மறுபடியும் சிறையில் அடைக்கப்படுவது என்று போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆயினும் அணு உலையை மூட அரசு முன்வராததால் முகிலனால் ஒன்றும் செய்ய முடியாமல் போகிறது.

கிரானைட் கொள்ளையில், ஆய்வு செய்து, அதில் ஈடுபட்ட கொள்ளையர்களை கண்டுபிடித்து தண்டனை வாங்கித் தர அயராது பாடுபட்ட சகாயத்திற்கு மாபெரும் உதவியாகவும் சகாயத்திற்கு பாதுகாப்பாகவும் முகிலன் மற்றும் அவரது தோழர்கள் செயல்படுகின்றனர். முகிலனின் செயல்களைக் கண்டு சகாயம் அவரை வெகுவாக பாராட்டி ஊக்கப்படுத்துகிறார். முகிலனின் செயல்பாடுகள் மேலும் உத்வேகப்படுகின்றது.

கடவுளை சுற்றி ஒளிவட்டம் இருப்பதைப்போல கடமையை செய்பவர்களைச் சுற்றி எப்போதும் மக்கள் கூட்டம் இருக்கும் என்பதற்கு நாளுக்கு நாள் முகிலனுக்கு பெருகிவரும் ஆதரவே

சான்றாக இருந்து வருகையில் ஓர் நாள் இரவு, முகிலன் சதீஷ், வன்னியரசு மூவரும் காணாமல் போகிறார்கள். இவர்களை கண்டுபிடிக்க காவல் துறையில் பலர் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்க முகிலனின் ஆதரவாளர்களுக்கு காவல் துறை மீது சந்தேகம் எழுகிறது. காவல் துறையை எதிர்த்து போராட்டம் நடத்தலாம் என்று அவர்கள் தீர்மானிக்கையில் உளவுத்துறை முகிலனையும் நண்பர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துகின்றனர்.

ஜல்லிக்கட்டுக்குத் தடை என்று அரசு அறிவித்ததும், இளைஞர்கள், மாணவர் களை ஒன்று திரட்டி நாடே அதிரும் அளவிற்கு முகிலன் போராட்டம் நடத்துகிறார். போராட்டம் தொடர்ந்து யினரிட மிருந்தும், நேரடியாகவும் மறை முகமாகவும் பலவித மிரட்டல்களையும் இன்னல்களையும் முகிலன் சந்திக்கிறார்.

முகிலன், மனைவியோடு வாழ்ந்த நாட்களைவிட போராட்டம் நடத்தி, சிறையில் வாழ்ந்த நாட்கள் தான் அதிகம். அதைப்பற்றி அவரைப்போலவே அவர் மனைவியையும் இப்போதெல்லாம் கவலைப்படுவவதே இல்லை.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து மாபெரும் போராட்டத்தை நடத்த முகிலன் முடிவெடுக்கிறார். ஸ்டெர்லைட் ஆலையால் காற்று, தண்ணீர் மாசுபட்டு வருவதையும், அந்த நச்சுக்காற்று மக்களின் உயிருக்கும், சுற்றுச் சூழலுக்கும் மிகப் பெரிய கேடாக இருக்கிறது என்பதையும்



நடந்து அரசை அசைக்கிறது. போராட்டம் வெற்றி பெறுகிறது. ஜல்லிக்கட்டு மீண்டும் தொடர்கிறது. இதனால் இளைஞர்கள், மாணவர்களின் ஆதரவும், பொது மக்களின் ஆதரவும் பார்வையும் முகிலன் மீது திரும்புகிறது. ஆயினும், பல அரசியல் கட்சியினரிடமிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும், காவல் துறை

உணர்ந்து ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராட்டம் நடத்த திட்டமிடு கிறார் முகிலன். அதற்கு நண்பர்களும் பொது மக்களும் பேராதரவு தர போராட்டத்தை தொடங்குகிறார் முகிலன்.

- முனைவர் ஆ. மவுரியன்

- தொடரும்

# மழை வேண்டுமா? யாகம் நடத்துங்கள்..!

பூமியைப் பிளந்து
16 ஆயிரம் அடி
ஆழ் கிணறு தோண்டி
கச்சா எண்ணெயைக்
களவாடு..!

நிலத்தடி நீரை விசமாக்கி
நெல்வயலுக்கு
நெருப்புவை..!

நெற்களஞ்சியத்தை
ஹைட்ரோகார்பனாக
மாற்றிவிடு..!

இப்போது
யாகம் நடத்து
அதுவும்...

"பர்ஜன்ய சாந்தி
வருண ஜபம் வேள்வி"
நடத்து! மழைவரும்?

காட்டை அழித்து
பல்லுயிர்களை
வேட்டையாடு!

உல்லாச விடுதிகளை
உயர்த்திக் கட்டி
குடித்து கும்மாளமடி!

இயற்கைச் சுரண்டி
கோடிக் கோடியாய்
கொள்ளையடி!
இப்போது
யாகம் நடத்து...

மலையில் துளைப் போடு
அணுவைக் கொண்டு
அதைப் பிளந்தெறி..!

இயற்கை எழில் கொஞ்சும்
தேனியை சுடுகாடாக
மாற்று
அதற்கு நியூட்ரினோ
ஆய்வகம் என்று பெயரிடு!

இப்போது
யாகம் நடத்து!
அதுவும்...

சுந்தரமூர்த்தி நாயனார்
இயற்றிய
ஏழாம் திருமறையை ஓது..!
மழைவரும்?

ஆற்று மணலை அள்ளு!
சாய - சாக்கடை - தோல்
கழிவுகளை அதில் தள்ளு!

வழிபாடா? திருவிழாவா?
சாவா? சடங்கா?
எதுவாக இருந்தாலும்

ஆற்றையே இலக்குவை
அதை நஞ்சாக்கி
நாசமாக்கு..!

துடித் துடிக்க
அதன் குரல்வளையை
அறுத்தெறி..!

உன் சந்ததிக்கு
ஒரு சொட்டு நீர் கூட
கிடைக்காமல் பார்த்துக்
கொள்!

இப்போது
யாகம் நடத்து!
அதுவும்...

நாதஸ்வரம்,
வயலின், புல்லாங்குழல்,
வீணை வாத்தியங்கள்
முழங்க... அமிர்தவர்ஷினி
மேகவர்ஷினி கேதாரி
ஆனந்த பைரவி ரூப
கல்யாணி ராகங்களை
வாசித்துக் கொண்டே யாகம்
நடத்து...

மழைவரும்?

8 வழிச்சாலையில் உள்ள
7மலைகளையும் தின்று
ஏப்பம் விடு..!

கோடிக் கணக்கான
மரங்களையும் ,
பல்லுயிர்களையும்
வெட்டிச் சாய்த்து;
ஏரி குளத்தில் எரிமேடைக்
கட்டிவை..!

தலைமுறை
தலைமுறையாக
எமக்கு சோறு போட்ட
நிலத்தை
வேரோடு பிடுங்கி எறி!



அதில் நீ போடும்
பளபளப்புச் சாலையில்
எம் உழவர்களை
அம்மணமாக அலையவிடு!

இப்போது
யாகம் நடத்து
அதுவும்!..!

“சிவபெருமானுக்கு
சீதள கும்பம் எனப்படும்
தாரா பத்திர நீர் விழா
செய்”

மகா விஷ்ணுவுக்க
சிறப்பு திருமஞ்சனம்...

வருண சூக்த வேத
மந்திர பாராயணமும்...

வருண காயத்ரி
மந்திர பாராயணமும்
செய்து ஓது!

மழைவரும்!

அதோடு...
காட்டையும் கடலையும்
நீரையும் நிலத்தையும்
வேட்டையாட
கார்ப்பரேட் காரனுக்கு
எழுதிக் கொடு..!

கூடங்குளத்தையும்
தூத்துக்குடியையும்
புதைகுழியாக மாற்றிவிடு..!

சூயெஸ்க்கும்
எல்.என்.டிக்கும்
தண்ணீரைக்
தாரைவார்த்துக்
கொடுத்துவிடு..!

ஒன்றும் கவலைவேண்டாம்
எங்கள் ஆட்சியாளர்கள்,
வாக்காளர்கள்,

குருடர்களாக...
செவிடர்களாக...
ஊமைகளாக...
அடிமைகளாக...
மூடர்களாக...
சூடு சொரனை
அற்றவர்களாக
இருக்கும் வரை..!

உங்கள் காட்டில்
மழைதான்..!

நீங்கள் ஒன்றும்
கவலைப்பட
தேவையில்லை..!

எங்களுக்கு
மாட்டு மூத்திரமும்,

மாட்டுச் சானியும்
போதும்..!

நீங்கள்
யாகம்நடத்துங்கள்!

நிச்சயமாக மழை வரும்!

– கவிஞர் **நிவேதிதா**




# ஒரே மொழி, ஒரே தேசம்

இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், அதிலும் குறிப்பாக சமத்துவத்துக்கான உரிமைகளைப் பற்றிப் பேசும் அரசமைப்புச் சட்டத்தின் 15(1)ஆம் பிரிவானது, 'இந்தியக் குடிமக்களில் யாரையும் மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசு பாகுபடுத்தாது' என்று கூறுகிறது. இந்தப் பிரிவிலும் சரி; 'அரசாங்க வேலைவாய்ப்பில், பதவி விஷயங்களில் குடிமக்கள் யாரையும் மதம், இனம், சாதி, பாலினம், கால்வழி மரபு, பிறந்த இடம், வசிப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசு பாகுபடுத்தாது' என்று கூறும் 16(2)ஆம் பிரிவிலும் சரி; மொழியை இந்திய அரசு இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை.

இதிலிருந்தே இந்திய மொழிகள் அனைத்தும் இந்திய அரசமைப்பில் ஒரே தகுதியைக் கொண்டவையல்ல என்பதும், இந்திய அரசு அனைத்து இந்திய மொழிகளையும் சமமானதாகப் பாவிக்காது என்பதும் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. இந்தியாவின் அலுவல் மொழி பற்றிப் பேசும் 343(1)ஆம் பிரிவு 'இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழி இந்தி' என்று கூறுகிறது. பிற மொழி பேசும் மாநிலங்களுக்கான சலுகையாக, 'அலுவல் விஷயங்களுக்காக இப்போது ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதைப் போலவே அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வரும் நாளிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுவது தொடரும்' என்று 343(2) கூறுகிறது.

எதற்கும் இருக்கட்டும் என்று, '15 ஆண்டுகளுக்குப் பிறகும் அலுவல் விஷயங்களுக்காக ஆங்கிலம் நீட்டிக்கப்படுவது அவசியமெனில், அதை நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் நீட்டிக்கலாம்' என்று 343(3) கூறுகிறது. தேச ஒற்றுமையின் பெயரிலான தனியுரிமைபல தேசிய இனங்களைக் கொண்ட, பல மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட ஒரு நாட்டில், ஒரு மொழிக்கு மட்டும் ஏனிந்த அலுவல் மொழி என்ற தனியுரிமை? ஒரு நாட்டில் உள்ள அனைத்து மதங்களும், இனங்களும், சாதிகளும் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும் எனில், மொழி விஷயத்தில் மட்டும் ஏனிந்தப் பாரபட்சம் காட்டப்பட வேண்டும்? இதற்கான விடை: தேச ஒற்றுமை. 'இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும் தெரிந்த மொழியாக ஒரு மொழியேனும் இருக்க வேண்டும், அது இந்திய மொழியாக இருக்க வேண்டும். அனைவரும் ஒரே மொழியில் தங்களது கருத்துக்களை, உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டால்தான் மக்கள் அனைவருக்கும் நாம் ஒரே தேசத்தவர் என்ற உணர்வு வரும், தேசிய ஒருமைப்பாடு ஓங்கும்' என்ற தர்க்கமே இதன் அடிப்படை.

சுதந்திரப் போராட்டக் கால காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் இந்தப் புரிதலையே கொண்டிருந்தனர். இலக்கியத் தகுதியின் அல்லது பழமையின் அடிப்படையில் அல்ல. மாறாக, இந்தியாவில் பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் மொழி என்ற அடிப்படையிலேயே இந்திய அரசின் அலுவல் மொழியாக இந்தி ஆக்கப்படுவதாகக் காரணம் கூறப்பட்டது. வேடிக்கை என்னவெனில் இந்தி, உருது, பஞ்சாபி மட்டுமல்ல மைதிலி, போஜ்புரி, அவாதி, அங்கிகா, பிராஜ் போன்ற பல மொழிகளையும் இந்தி அல்லது இந்துஸ்தானி என்று கணக்கில் எடுத்துக்கொண்டால் மட்டுமே இந்தி/இந்துஸ்தானி பேசுபவர்களின் எண்ணிக்கை சுமார் 45%. மற்றபடி, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 25% மட்டுமே. தேசிய மொழி வேறு, அலுவல்

# சாத்தியமா?

மொழி வேறா? இந்திய அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட வேளையில் அதை இந்தி, இந்துஸ்தானி, உருது ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்க நிபுணர் குழுக்கள் அமைக்கப்பெற்று மொழியாக்கப்பட்டன. இந்த மூன்று மொழிகளும் நன்கு தெரிந்த நேருவின் பார்வைக்கு மொழியாக்கங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. படித்துப் பார்த்த நேரு, புத்தகங்களைத் தனக்கு அனுப்பிவைத்த அரசமைப்பு அவையின் தலைவரும் பின்னர் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகவும் ஆன ராஜேந்திர பிரசாத்துக்கு எழுதிய கடிதத்தில், 'ஒன்றுமே விளங்கவில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த மூன்று மொழிகளுடன் ஒப்பிடுகையில் தமிழும் வங்கமும் நவீன அரசியல், அறிவியல், தொழில்நுட்பக் கருத்துக்களை மொழிபெயர்ப்பதற்குப் பெரிதும் ஏற்றவையாக இருந்தன என்ற கருத்தைப் பல அறிஞர்கள் அப்போதே கூறினர்.இங்கு ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.



இந்தி இந்தியாவின் தேசிய மொழி அல்ல; அலுவல் மொழி மட்டுமே என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஏதோ இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதைப் போல். அலுவல் மொழி என்பது தேசிய மொழி என்பதன் இடக்கரடக்கலன்றி வேறில்லை என இந்திய அரசமைப்புச் சட்ட உருவாக்கம் பற்றியும் அதன் செயல்பாடு பற்றியும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட அமெரிக்க சட்ட அறிஞர் கிரான்வில் ஆஸ்டின் கூறுகிறார். ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் உட்பட உலகின் அனைத்து நாடுகளுமே அலுவல் மொழி என்றுதான் குறிப்பிடுகின்றனவேயன்றி, தேசிய மொழி என்றல்ல.ெ

ஜெர்மனி, பிரான்ஸ், சீனா போன்ற மிகப் பெரும்பான்மையான மக்கள் ஒரே தேசிய இனமாக, ஒரே மொழி பேசுபவர்களாக இருக்கும் நாடுகளில் தேசம், அரசு ஆகிய இரண்டுக்கும் முரண்கள் ஏதும் இருப்பதில்லை. ஆக, ஒரே அலுவல் மொழியை அவை கொண்டிருப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், இந்தியா போன்ற பல தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளில் அவற்றின் மொழிகள் சமமான தகுதியைக் கொண்டவையாக இருப்பது அவசியம் அல்லவா? 60 லட்சம் பேர் மட்டுமே கொண்ட சிங்கப்பூரில் நான்கு மொழிகளும், 80 லட்சம் பேர் கொண்ட சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகளும் அலுவல் மொழிகளாக இருக்கின்றன. 5.5 கோடி மக்கள்தொகை, (தமிழ்நாட்டை விடக் குறைவான மக்கள்தொகை) கொண்ட தென்னாப்பிரிக்காவில் 11 மொழிகள் அலுவல் மொழிகளாக இருக்கின்றன. எனில், 130 கோடிப் பேர் மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் 15 அல்லது 20 மொழிகள் அலுவல் மொழிகளாக இருப்பதில் என்ன சிக்கல்?

பல மொழிகள் கற்பது என்பது அற்புதமானது, அறிதல் திறனை அதிகரிப்பது. ஆனால், எந்தெந்த மொழிகளைக் கற்பது என்பது அந்தந்த மனிதனின் விருப்பத்துக்கு விடப்பட வேண்டும். தனது நாட்டில் பேசப்படும் மொழிகளில் ஒரு மொழியை மற்றொரு மொழியைவிட தகுதிக் குறைவானதாக நடத்தும் எந்த ஒரு அரசும் தனது நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்வை உண்டாக்கிவிட முடியாது. தனது மொழியின் உரிமையை விட்டுக்கொடுத்துதான் நாட்டில் ஒற்றுமையை உண்டாக்க முடியுமெனில், சுயமரியாதை உள்ள யாரும் நாட்டின் ஒற்றுமையைத்தான் தியாகம் செய்வாரேயன்றி, தனது மொழியை அல்ல என்பதை இந்திய அரசு உணர வேண்டும்.

**- V. அருணாச்சலம்**

ஒருபக்க சிறுகதை

# மக்கு சாம்பிராணி

ஆற்றங்கரை ஓரமாக வந்து கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது..

அது வைரம் என்றறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்..

அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்.

ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான்.

ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான்.

இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டு சென்றான்.

ஆத்திரமடைந்த வியாபாரி, அந்த வழிப்போக்கனை பார்த்து, “அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும். அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!” என்று திட்டினான்..

அதற்கு அவன், “அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான். ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட



நீ தான் மிகப் பெரிய முட்டாள்” என்றான்..

சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.



# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து



பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்

- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்





போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்



நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்

சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்




- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements
  and anything




No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**